(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 10 (3).]

# பாராளுமன்றம்

## 10 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2014 பெப்புருவரி 21 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2014 மாச்சு 04, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 1985 ஆம் ஆண்டின் 48 மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 21 ஆம் திகதிய 1846/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 21, 22, 23, 24 மற்றும் 24 அ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 ஒற்றோபர் 24 ஆம் திகதிய 1833/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 30 ஆம் திகதிய 1847/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 30 ஆம் திகதிய 1847/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 30 ஆம் திகதிய 1847/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

## 2014 மார்ச்சு 07, வெள்ளிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.199/ ’13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— ஏற்றுமதி சந்தைக்காக தூரியான் பயிர்செய்தல்,— அதிக விலைமதிப்புள்ளதும் ஏற்றுமதிச் சந்தையில் மிகுந்த கேள்வியைக் கொண்டதுமான பிரபல்யமான தூரியான் பழத்தை, நாடு கணிசமான அளவு வெளிநாட்டு செலாவணியை ஈட்டக்கூடியவாறு வர்த்தக ரீதியில் பயிர்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.200/ ’13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மும்மொழி இலங்கைக்கான பத்தாண்டுத் திட்டம்,— “மும்மொழி இலங்கைக்கான பத்தாண்டு திட்டம் 2012-2021” எனும் பத்தாண்டு கால அமைச்சரவைத் தீர்மானத்தை வரவேற்பதுடன் பன்மொழிப் பேசும் பல்லின மக்களின் முழு ஆதரவைப் பெற்று முழு நாட்டுக்கும் பயன்பெறக்கூடிய முறையில் அரச நிறுவனங்கள் தனிப்பட்ட நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் விரிவாக விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

# 2014 மார்ச் 20, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2904/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கையடக்க மற்றும் சீ.டீ.எம்.ஏ. தொலைபேசிச் சேவைகளை செயற்படுத்து வதற்காக இதுவரை உரிமம் வழங்கப்பட்டுள்ள கம்பனிகளின் பெயர்களையும்;

(ii) இற்றை வரையிலான மேற்கூறிய கம்பனிகளின் பணிப்பாளர்களின் பெயர்களை தனித்தனியாகவும்;

(iii) 2006 ஆம் ஆண்டின் பின்னர், கையடக்க மற்றும் சீ.டீ.எம்.ஏ. தொலைபேசிச் சேவை வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட புதிய அலைவரிசைகளையும் தொலைபேசி இணைப்புக்களையும்;

(iv) மேற்படி கம்பனிகளின் பணிப்பாளர்களது பெயர்களைத் தனித்தனியாகவும்;

(v) அலைவரிசைகளின் மற்றும் தொலைபேசி இணைப்புகளை ஒதுக்கீடு செய்வதற்காக பெறப்பட்ட கோரிக்கைகளையும்;

(vi) 2011, 2012 ஆம் ஆண்டுகளில் மேற்கூறிய கம்பனிகளினால் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்ட தொகையை ஒவ்வொரு கம்பனிக்குமாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) சந்தை விலையை விட மிகக் குறைவான விலைக்கு கையடக்கத் தொலைபேசி இயக்குநர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டனவா என்பதை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3212/ '12

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும், பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரங்கிரி தம்புலு ரஜமகா விகாரை சங்கசபையில் அங்கத்துவம் வகிக்கின்ற பிக்குணிமார்களின் தேசிய அடையாள அட்டைகளில் 2004 ஆம் ஆண்டுவரை பிக்குணி எனக் குறிப்பிடப்பட்டிருந்ததென்பதையும்;

(ii) 2004 ஆம் ஆண்டுக்குப் பின்னர், அவ்விதமாக அடையாள அட்டைகளை விநியோகிக்க வேண்டாமென பௌத்த அலுவல்கள் ஆணையாளரால் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட பிக்குணிமார்களும் இந்நாட்டுப் பிரசைகள் என்பதை ஏற்றுக்கொள்கிறாரா;

(ii) ஆமெனில், இவர்களுக்கு "பிக்குணிமார்" எனக் குறிப்பிட்டு தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்காமைக்கான காரணங்கள் யாவை;

(iii) பிக்குணிமார்களின் கௌரவம் பாதுகாக்கப்படக்கூடியவாறு "பிக்குணிமார்" எனக் குறிப்பிட்டு தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுப்பாரா;

(iv) ஆமெனில், அத்திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3384/ '12

கௌரவ பி. ஹரிசன்,— வன சீவராசிகள், வளப்பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1950 ஆம் ஆண்டின் பின்னர் இந்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட யானைகள் தொகை மதிப்பீடுகளின் எண்ணிக்கை, அவை நடாத்தப்பட்ட வருடங்கள் மற்றும் ஒவ்வொரு மதிப்பீட்டினதும் தகவல்கள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2011 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட யானைகள் தொகை மதிப்பீட்டுக்குச் செலவு செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு;

(ii) அதன் அறிக்கையைச் சமர்ப்பிப்பாரா;

(iii) இன்றேல், அதற்கான காரணம் யாது;

(iv) இவ்வறிக்கையின் படி அதிகரித்துள்ள யானைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு அவற்றைப் பராமரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கு காட்டு யானைகளையும் வன விலங்குகளையும் கண்டுகளிப்பதற்கான இடங்கள் அமைக்கப்பட்டுள்ளனவா;

(ii) அவ்விடங்கள் யாவை;

(iii) ஓர் உல்லாசப் பிரயாணியிடமிருந்து இவ்விடங்களில் அறவிடப்படும் பணத்தொகை எவ்வளவு;

(iv) கடந்த ஐந்து வருடங்களில் இவ்வாறான இடங்களிலிருந்து ஈட்டப்பட்டு அரசுக்கு வழங்கப்பட்ட வருமானம் வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) வன சீவராசிகள் பேணல் திணைக்களத்தால் வன சீவராசிகள் பேணல் மேம்பாட்டிற்கு வழங்கப்படும் பங்களிப்பு தொடர்பாக ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

(ii) வன நிலப்பரப்பு குறைந்துள்ளதனால் தமது இருப்பு தொடர்பில் ஆபத்துக்குள்ளாகியுள்ள வன விலங்குகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

4051/ '13

கௌரவ அஜித் குமார,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி பாணந்துறை வீதியில் எல்லகாவ முதல் தும்பர மானான, கெட்டேபொல பிரதேசங்களுக்குச் செல்கின்ற வீதியில் களுகங்கைக்கு குறுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள தற்காலிக பாலம் சேதமடைந்துள்ளது என்பதையும்;

(ii) சேதமடைந்துள்ள மேற்படி பாலத்தின் மீது இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ்வண்டிகள் மற்றும் வேறு கனரக வாகனங்கள் செல்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளமைக்கான காரணம் யாது என்பதையும்;

(iii) மேற்படி சேதமடைந்துள்ள பாலத்தைப் பயன்படுத்தும் போது இடம்பெறக்கூடிய விபத்தின் பொறுப்பை யார் ஏற்றுக்கொள்வார் என்பதையும்;

(iv) மேற்படி பாலம் சேதமடைந்துள்ளது என்றும், வாகனப் போக்குவரத்து அபாயகரமானதென்றும் அறிவுறுத்தி அறிவித்தல் பலகை பொருத்தப்பட்டுள்ளமை போதியதல்ல என்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி தற்காலிக பாலத்திற்குப் பதிலாக நிரந்தர பாலமொன்றை நிர்மாணிப்பாரா என்பதையும்;

(vi) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4097/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருகோணமலை நகரசபை ஐக்கிய அமெரிக்காவுடன் உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி உடன்படிக்கையின் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) அவ்வாறான உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடம் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஏதாவதொரு வெளிநாட்டுடன் உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்கு நகர சபையொன்றுக்கு அதிகாரம் உள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4138/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அக்கரைப்பற்றுக்கும் கொழும்புக்கும் இடையிலான பஸ் சேவையானது தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இந்த நிலைமையின் கீழ் அக்கரைப்பற்றிலிருந்து இறக்காமம் மற்றும் ஹிங்குரான ஊடாக கொழும்பு வரை பயணிக்கும் மக்களுக்கு பாரிய அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி நிலைமையைக் கருத்திற்கொண்டு அக்கரைப்பற்றுக்கும் கொழும்புக்கும் இடையில் நேரடியான பஸ் சேவையொன்றை துரிதமாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4158/ '13

கௌரவ ஆர்.எம். ரஞ்ஜித் மத்தும பண்டார,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்புச் சபையினால் துண்டிக்கப்பட்டுள்ள நீர் விநியோக இணைப்புகளை மீண்டும் வழங்கும்போது குடிமனைசார் நீர் பாவனையாளர் ஒருவரிடமிருந்து ரூபா 500.00 மற்றும் வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து ரூபா 1500.00 வீதம் அறவிடப்பட்டது என்பதையும்;

(ii) துண்டிக்கப்பட்ட நீர் விநியோக இணைப்பு ஒன்றை மீண்டும் வழங்குவதற்கான கட்டணமானது தற்போது குடிமனைசார் நீர் பாவனையாளர் ஒருவரிடமிருந்து ரூபா 2300.00 மற்றும் வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து ரூபா 6900.00 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) துண்டிக்கப்பட்டுள்ள நீர் விநியோக இணைப்புகளை மீண்டும் வழங்குவதற்கான புதிய கட்டணங்கள், முன்னர் இருந்த கட்டணத்தைப் போன்று ஐந்து மடங்கினால் உயர்த்தப்பட்டுள்ளதன் காரணமாக அனைத்து நீர் பாவனையாளர்கள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) துண்டிக்கப்பட்ட நீர் விநியோக இணைப்புகளை மீண்டும் வழங்குவதற்காக தற்போது அறவிடப்படும் கட்டணத் தொகையைத் திருத்தியமைத்து, ஒட்டுமொத்த நீர் பாவனையாளர்களுக்கும் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4180/ '13

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை மின்சார சபையின் "அனுப்பல் விநியோக நோக்கங்கள்" எனப்படும் கருத்திட்டத்திற்குரியதாக கொழும்பு 'பைப்' வீதியில் அமைந்துள்ள கருத்திட்ட அலுவலகத்தைப் பெற்றுக்கொள்ளும் போது பின்பற்றப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறை யாதென்பதையும்;

(ii) இலங்கை மின்சார சபைக்கு வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் போது பின்பற்றப்படும் முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பலதரப்பட்ட இயந்திர சாதனங்களைக் கொள்வனவு செய்யும் போது அவற்றின் நிலைமையை பரிசோதிப்பதற்காக உத்தியோகத்தர்கள் வெளிநாடு செல்லும் செயல்நடைமுறை நடைபெறுகின்ற விதம் யாதென்பதையும்;

(ii) 2011 தொடக்கம் 2013 ஜுன் மாதம் வரை அவ்வாறு வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்களின் தகவல்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கை மின்சார சபையினால் பலதரப்பட்ட கொள்ளளவுகளிலான "மின் பிறப்பாக்கி" வகைகள் கொள்வனவு செய்யப்படும் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) 2011 தொடக்கம் 2013 ஜுன் மாதம் வரையிலான காலப்பகுதியில் மேற்படி ஒவ்வொரு மின் பிறப்பாக்கி வகையும் கொள்வனவு செய்யப்பட்டபோது பின்பற்றப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறையை தெளிவுபடுத்துவாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4221/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— நுகர்வோர் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011, 2012, 2013 ஆகிய ஆண்டுகளில் நுகர்வோர் நலன்புரியை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதை தனித் தனியே அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4227/ '13

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டு முதல் இன்று வரை மக்கள் வாக்குகளின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதேச சபை பிரதிநிதிகள், நகர சபை பிரதிநிதிகள் மற்றும் மாகாண சபை பிரதிநிதிகளில் தற்போது, ஊழல், குற்றச்செயல் அல்லது வேறு சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டமை காரணமாக குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், உரித்தான அரசியல் கட்சிகள் மற்றும் இவர்கள் மாகாண சபையில், நகர சபையில் மற்றும் பிரதேச சபையில் வகித்த அல்லது தற்போது வகித்துவருகின்ற பதவிகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்ட மக்கள் பிரதிநிதிகளில் தற்போது சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) தற்போது சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு குற்றவாளிகளாக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்டவாறு ஊழல் பேர்வழிகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களைப் பிரதிநிதித்துவம் செய்வதன் காரணமாக திட்டமிடப்பட்ட ஊழல்கள், குற்றச் செயல்கள் மற்றும் பலதரப்பட்ட சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதற்கு ஏதுவாயமைகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற ஊழல் பேர்வழிகள் மற்றும் குற்றவாளிகள் பிரதேச மற்றும் மாகாண சபை அரசியலில் பிரவேசிப்பதை தடுப்பதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4280/ '13

கௌரவ துனேஷ் கன்கந்த,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 நவம்பர் 19ஆந் திகதி தொடக்கம் 2013 ஜூன் மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியினுள் அமைச்சர்களுக்கு (அமைச்சரவை அந்தஸ்துள்ள மற்றும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத) பிரதி அமைச்சர்களுக்கு, மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல்கள் தொடர்பான சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு அமைச்சருக்கு, பிரதி அமைச்சருக்கு மற்றும் பாராளுமன்ற உறுப்பினருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறிய முறைப்பாடுகள் தொடர்பாக மேற்படி ஆணைக்குழுவின் மூலம் புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக மேற்கொண்டு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை;

(iii) இதுவரை புலனாய்வுகள் பூர்த்தி செய்யப்படாத முறைப்பாடுகள் தொடர்பாக துரிதமாகவும் முறைசார்ந்த விதத்திலும் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

(iv) இதற்கு எவ்வளவு காலம் எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4285/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் எத்தனை லீற்றர் திரவப் பால் உற்பத்தி செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ், 2016 ஆம் ஆண்டளவில் அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டு திரவப் பால் உற்பத்தியின் அளவு எத்தனை லீற்றர்கள் என்பதையும்;

(iii) 2016 ஆம் ஆண்டளவில் பால் நுகர்வின் தேவைப்பாடு எவ்வளவென்பது கணிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் அளவு எவ்வளவென்பதையும்;

(v) இந்த இலக்குகளை அடைவதற்கு அரசாங்கம் செயற்படுத்தியுள்ள மற்றும் எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2013 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து இன்றுவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள திரவப் பால், பால் மா, வெண்ணெய், மற்றும் பாலாடைக்கட்டிகள் போன்ற பால் சார்ந்த உற்பத்திகளின் அளவு, பெறுமதி மற்றும் அவை இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்படி இறக்குமதிச் செலவை குறைப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) பால் உற்பத்தி, உள்நாட்டு பால் மா உற்பத்தி மற்றும் இதர பால் சார்ந்த உற்பத்திகள் தொடர்பாக தனியார் துறை/பல் தேசிய கம்பனிகள் செய்யும் பங்களிப்பு அளவு ரீதியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4313/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வன சீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உடவளவை, யாலை, வில்பத்து, வஸ்கமுவ, கல்கமுவ மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களில் வாழும் மக்கள் தொடர்ந்தும் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு ஆளாகின்றார்கள் என்பதையும்;

(ii) காட்டு யானைகளினால் இடம்பெறுகின்ற தொந்தரவுகளிலிருந்து மேற்படி பிரதேச மக்களை பாதுகாப்பதற்கான தீர்வொன்றாக 2002 ஆம் ஆண்டு முதல் மின்சார வேலிகளை பராமரித்தல், காட்டு யானைகளை விரட்டுதல், வேட்டையாடுவோர் மற்றும் வேட்டை இறைச்சிகளை விற்பனை செய்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்துதல் ஆகிய நடவடிக்கைகளுக்காக வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தில் சேவையாற்றும் பொருட்டு ஆட்கள் அமய ஊழியர்களாக ஆட்சேர்க்கப்பட்டார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) (ii) இற்கு அமைய ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) 2013.01.01 ஆம் திகதி முதல் மேற்படி ஊழியர்களின் சேவை இடைநிறுத்தப் பட்டுள்ளதன் காரணமாக குறித்த பிரதேசங்களில் காட்டு யானைகளினால் இடம்பெறுகின்ற விபத்துக்கள் மீண்டும் அதிகரித்துள்ளதையும், தொழிலை இழந்துள்ள மேற்படி ஆட்கள் கடும் அசௌகரியங்களை எதிர்நோக்கி உள்ளதையும் ஏற்றுக் கொள்கின்றாரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஊழியர்களுக்கு மீண்டும் சேவையைப் பெற்றுக் கொடுத்து நிரந்தர சேவையில் அமர்த்தி மேற்படி பிரதேசங்களில் காணப்படுகின்ற காட்டு யானைகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3221/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012ஆம் ஆண்டில் ஒவ்வொரு மத அடிப்படையில் இலங்கை சனத்தொகையின் சதவீதத்தை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) 2012 இல் மேற்கொள்ளப்பட்ட தேசிய கணிப்பீட்டின் மூலம் மேற்படி விபரங்கள் உறுதிப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iii) மக்கள் பலவந்தமாக மதம் மாற்றியமை தொடர்பாக அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கையை மாவட்ட அடிப்படையில் தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) மக்களை பலவந்தமாக மதம் மாற்றினார்கள் என கண்டறியப்பட்ட ஆட்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3590/ '13

கௌரவ புத்திக பதிரண,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) என்ஜின் இயலளவின் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை வருடாீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்

(iii) மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்காக செலவிடப்பட்டுள்ள வெளிநாட்டுச் செலாவணித் தொகை வருட ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை சென்மதி நிலுவைப் பத்திரத்தின் பற்றாக்குறை அல்லது மிகை வருட ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(ii) மோட்டார் வாகனங்கள் இறக்குமதிக்காக வெளிநாட்டுச் செலாவணியைச் செலவிட நேரிட்டுள்ளமையின் காரணமாக சென்மதி நிலுவைப் பற்றாக்குறை அதிகரிப்பதில் பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறு சென்மதி நிலுவையில் ஏற்படும் அழுத்தத்தை குறைப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2014 மார்ச்சு 21, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

3154/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2010, 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில்,

(i) இலங்கைக்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளையும்;

(ii) சுற்றுலாத்துறையில் ஈட்டிய வருமானத்தையும்

அவர் தனித்தனியாக கூறுவாரா?

(ஆ) (i) 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் உல்லாசப் பயணிகளையும்;

(ii) 2009, 2010, 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் இற்றைவரையிலும் தாய்லாந்து, மலேசியா, மாலைதீவு, இந்தியா, துபாய், இந்தோனேஷியா மற்றும் வியட்நாம் ஆகியவற்றிற்கு வருகைதந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையையும்;

(iii) மேற்குறிப்பிட்ட நாடுகளில் சுற்றுலாப் பயணிகளின் நாளாந்த சராசரிச் செலவையும்

அவர் தனித்தனியாகக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3213/ '12

கௌரவ புத்திக பதிரன,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கண்டி மாநகர சபையினால் சேகரிக்கப்படும் குப்பை கூளங்கள் மற்றும் திண்மக் கழிவுகள் ஹாரிஸ்பத்து பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தில் கொஹாகொட எனும் இடத்தில் அகற்றப்படுகின்றதென்பதையும்;

(ii) இக்கழிவுகள் மகாவலி கங்கையில் சேர்வதால் பிரதேச மக்களின் குடி நீர் மாசடைதல் மற்றும் துர்வாடை காரணமாக பிரதேசவாசிகள் பலவித நோய்களுக்கு ஆளாகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கண்டி மாநகர சபையினால் கழிவுகளை முறைப்படி முகாமை செய்து இதை ஒரு வளமாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அத்திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3327/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்தசாசன, மதஅலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை பொலிஸ் சேவையில்,

(i) பிரதான பொலிஸ் பரிசோதகர்களுக்கு கீழேயுள்ள ஏனைய தரங்களில் பதவியர்வு வழங்கப்படுகின்ற முறையியல்;

(ii) இளைப்பாறுதலுடன் தொடர்புடையதாக நிலவுகின்ற முறையியல்

யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இலங்கை பொலிஸில் கீழ் மட்டத் தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற,

(i) மாதாந்த விளக்குப் படி;

(ii) வருடாந்த முதலுதவிப் படி;

(iii) மாதாந்த கஷ்டப் படி; மற்றும்

(iv) மாதாந்த நன்னடத்தைப் படி

தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) வெளிப் பிரதேச பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களின் "சிப்பாய் விடுதிகளில்"(பெரெக்ஸ்) இருக்க வேண்டிய அடிப்படை வசதிகள் தொடர்பில் நிலவுகின்ற குறைபாடுகள் பற்றி அவர் அறிவாரா?

(ஈ) பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களை இரவுநேரச் சேவையில் ஈடுபடுத்துதல் சம்பந்தமாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

3432/ '13

கௌரவ பி. ஹரிசன்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 டிசம்பர் மாதம் இடம்பெற்ற வெள்ளப்பெருக்கு காரணமாக பாதியளவிலும் முழு அளவிலும் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) முழுமையாக சேதமடைந்த வீடொன்றுக்கும் பாதியளவில் சேதமடைந்த வீடொன்றுக்கும் செலுத்தப்படும் நட்டஈட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது முழுமையாகவும் பாதியளவிலும் சேதமடைந்த வீடுகளுக்காக செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நட்டஈட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நட்டஈட்டுத் தொகை அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் செலுத்தப்படுகின்றதா அல்லது வேறேதேனும் அமைச்சினால் அல்லது நிறுவனமொன்றினால் செலுத்தப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டில் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமையினால் இழக்கப்பட்ட உயிர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உயிரிழப்புகள் நிகழ்ந்த பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவையென்பதையும்;

(iii) இவ்வாறு உயிரிழந்த ஒருவருக்காக வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நட்டஈட்டுத் தொகை வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு காரணமாக காணாமற்போனவர்களுக்காவும் வழங்கப்படுமா என்பதையும்;

(v) மேற்படி காலப்பகுதியில் மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக உயிரிழந்தவர்களுக்காக இற்றைவரை செலுத்தப்பட்டுள்ள நட்டஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3701/ '13

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்துக்கு வரி செலுத்துகின்ற அரச மற்றும் தனியார் எரிபொருள் சந்தைப்படுத்தல் கம்பனிகள் யாவை;

(ii) கடந்த 10 வருட காலப் பகுதியினுள் மேற்படி ஒவ்வொரு கம்பனியும் வருடாந்தம் செலுத்திய வரியின் அளவுகள், ஒவ்வொரு வகை வரிக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது;

(iii) வரி செலுத்துகையில் ஏதேனும் ஒரு கம்பனிக்கு ஏதேனும் வரி விடுவிப்பு வழங்கப்பட்டுள்ளதா;

(iv) ஆமெனில், மேற்படி கம்பனிகளின் பெயர்கள் யாவை;

(v) இத்தகைய வரிச் சலுகையை வழங்குவதற்கான காரணங்கள் யாவை;

(vi) கடந்த பத்து வருட காலப் பகுதியினுள் மேற்படி வரி விடுவிப்பு வழங்கப்பட்டமையின் காரணமாக இலங்கை அரசாங்கம் இழந்துள்ள வரித் தொகை ஒவ்வொரு வகை வரிக்கும் ஏற்ப வருடாந்தம் வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4222/ '13

கௌரவ அஜித் பி. பெரேரா,— தேசிய வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (I) தேசிய வளங்கள் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி எவ்வளவென்பதையும்;

(ii) 2011, 2012, 2013 ஆகிய வருடங்களில் மேற்படி அமைச்சின் அலுவல்களுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை வருடாந்தம் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) தேசிய வளங்களின் பாதுகாப்பிற்காக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) தேசிய வளங்களின் மேம்பாட்டுக்காக அமைச்சு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4283/ '13

கௌரவ துனேஷ் கங்கந்த,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன , மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்ட ரூபா 750/= வீதம் இராணுவ வீரர்களின் பெற்றோருக்கான கொடுப்பனவை வழங்குவதற்கு தகுதியானவர்களைத் தெரிவுசெய்யும்போது கவனத்தில் கொள்ளப்படும் அளவீடுகள் யாவை என்பதையும்;

(ii) தற்போது குறித்த கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கான உரித்தைப் பெற்றுள்ள இராணுவ வீரர்களது பெற்றோரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பெற்றோர் குறித்த கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் உரித்தைப் பெறுவதற்கு அடிப்படையாகவுள்ள இராணுவ வீரர்களின் எண்ணிக்கை தரைப்படை, வான்படை மற்றும் கடற்படையென்ற ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளதன்படி, மேற்படி கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெற்றுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெற்றோர் வங்கிக் கணக்குகளை ஆரம்பித்து ஓராண்டுக்கும் அதிக காலம் கடந்துள்ளபோதிலும் இற்றைவரை குறித்த கொடுப்பனவு சம்பந்தப்பட்ட கணக்குகளில் வரவு வைக்கப்படவில்லையென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அவ்வாறெனின், பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெற்றோருக்கும் குறித்த கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அதற்காக எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4314/ '13

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க கணக்காளர் சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டு 2013 மே மாதம் 03 ஆம் திகதி பெறுபேறுகள் வெளியிடப்பட்டன என்பதையும்;

(ii) மேற்படி பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதென்பதையும்;

(iii) பரீட்சையில் சித்தியடைந்துள்ள போதிலும், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாத சிலர் எஞ்சியுள்ளார்கள் என்பதையும்;

(iv) இவர்களின் பெறுபேறு அட்டைகளில் இவர்கள் பெற்றுள்ள திறமைகள் குறிப்பிடப்பட்டு அனுப்பப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரசாங்க கணக்காளர் சேவையின் வகுப்பு III இல் காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) மேலும் நிரப்ப வேண்டியுள்ள வெற்றிடங்கள் எஞ்சியுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்த எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு குறித்த பரீட்சையில் தகைமை பெற்றுள்ளவர்களை ஆட்சேர்க்கலாம் என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(vi) ஆமெனில் அதற்காக மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4329/ '13

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகாதார அமைச்சு அறுவை சிகிச்சைக் கையுறைகளை (Surgical Gloves) இறுதியாக கொள்வனவு செய்த திகதி யாதென்பதையும்;

(ii) குறித்த திகதியில் கொள்வனவு செய்யப்பட்ட கையுறைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி கொள்வனவுக்காக திறந்த கேள்விப்பத்திரம் கோரப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதன் பொருட்டு கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்த கம்பனிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற அறுவைச் சிகிச்சை கையுறைகளை விநியோகிக்கின்ற நிறுவனம் நறுமண உபகரணங்கள் மற்றும் ஔடதங்கள் ஒழுங்குமுறையாக்கல் அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) வைத்தியசாலைகளுக்கு சத்திர சிகிச்சைக் கையுறைகளை வழங்குவதற்காக அரசாங்கம் ஓர் ஆண்டில் செலவிடும் பணத் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3155/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பு பங்குப்பரிவர்த்தனை தொடர்பாக,

(i) அது ஆரம்பித்து வைக்கப்பட்டது எப்போது என்பதையும்;

(ii) தற்போது இயங்கிக்கொண்டிருக்கின்ற கிளைகளின் எண்ணிக்கையையும்;

(iii) கடந்த 3 வருடங்களாக செயற்படுகின்ற தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் தரகர்களின் எண்ணிக்கையை வருட வாரியாக வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) ஒவ்வொரு வகுதிக்குமான பொறுப்புக்கூறவேண்டிய பங்குகளின் எண்ணிக்கையோடு 1% - 2%, 3% - 5%, 6% - 15%, 16% - 40%, 41% - 100% ஆகிய சதவீதங்களின் வகுதிகள் தொடர்பாக வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள் ஆகிய பல்வேறு அமைப்புகளுடைய பங்குச்சந்தையின் மூலதனமாக்கத்தையும் அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3214/ '12

கௌரவ புத்திக பதிரன,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைசருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2007 ஆம் ஆண்டில் பொலிஸ் சார்ஜண்ட் பதவியிலிருந்து உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு சேவைக் காலத்தையும் திறமையினையும் அடிப்படையாகக் கொண்டு பதவியுயர்வு வழங்கப்பட்டதென்பதையும்;

(ii) இப்பதவியுயர்வு வழங்கப்படுகையில் வெட்டுப் புள்ளியாக 62 புள்ளிகள் இருந்த போதிலும் 47 புள்ளிகளுக்குக் குறைந்த உத்தியோகத்தர்கள் நால்வருக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) 47 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்த உத்தியோகத்தர்கள் மேன்முறையீடு செய்த போதிலும் அது கவனத்திற் கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iv) இப்பதவி உயர்வு வழங்குகையில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட உத்தியோகத்தர்கள் சிலர் உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் உதவியை நாடினர் என்பதையும்;

(v) இவர்களுக்கு மாத்திரம் பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(vi) ஒழுக்கப் பண்பாடு கொண்ட உத்தியோகத்தர்களாக நீதிமன்றத்தின் உதவியை நாடாதவர்களுக்கு இதுவரை பதவியுயர்வு வழங்கப்படாமை பெரும் அநீதியாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், இவ்வாறு அநீதிகளுக்குள்ளான உத்தியோகத்தர்களுக்கு குறித்த பதவியுயர்வை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எத் திகதியில் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3702/ '13

கௌரவ அனுர திஸாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உத்தேச கொழும்பு - கண்டி அதிவேக வீதியின் நீளம் யாதென்பதையும்;

(ii) இதை நிர்மாணிக்க ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இந்த அதிவேக வீதியை அமைப்பதற்காக ஏற்கப்படும் மொத்தச் செலவினம் யாதென்பதையும்;

(iv) இச்செலவினத்துக்காக கடன் பெறப்படுமாயின் அக்கடன் பெறப்படும் நிறுவனம் யாதென்பதையும்;

(v) இக்கடனுக்காக செலுத்த வேண்டிய வட்டி வீதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிபந்தனைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கொழும்பு - கண்டி அதிவேக வீதியின் நிர்மாண வேலைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள கம்பனி யாதென்பதையும்;

(ii) இக்கம்பனியைத் தேர்ந்தெடுக்கையில் முறை சார்ந்த கேள்விப் பத்திர நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

3822/ '13

கௌரவ பி. ஹரிசன்,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தம்புத்தேகம நகரம் மகாவலி நகரத் திட்டத்தில் உள்ள திட்டமிடப்பட்ட ஒரு நகரம் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) அந்த நகரத்தின் ஆரம்பத் திட்டத்தின்படி காணிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அந்த ஆரம்பக் காணி பெற்றவர்களில் தற்போது குடியிருப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தம்புத்தேகம நிலத்திலுள்ள அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த குடியிருப்பாளர்கள் குறிப்பிட்ட காணிகளில் அனுமதியின்றி குடியிருந்த வருடங்கள் யாவை என்பதையும்;

(iii) அனுமதியற்ற குடியிருப்பாளர்களுக்கு கட்டிடங்களைக் கட்டுவதற்கு மின்சாரம் மற்றும் குடிநீர் பெறுவதற்கு மகாவலி அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளதா என்பதையும்;

(iv) 2013 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதியில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) அனுமதியற்ற குடியிருப்பாளர்களுக்கு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள இடமளிக்கவிட்டு மௌனமாக இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி அனுமதியற்றவர்களின் காணிகளை சட்ட ரீதியானதாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இன்றேல் நகரத் திட்டத்துக்கமைய இவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3218/ '12

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின் கலகெதர தும்பனே பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்திலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களும் திண்மக் கழிவுப்பொருட்களும் பூஜாபிட்டிய பிரதேச சபைக்குச் சொந்தமான திக்ஒயவத்த எனும் காணியில் இடப்படுவதென்பதையும்;

(ii) அகற்றப்படுகின்ற கழிவுப் பொருட்கள் அப் பிரதேசத்தில் நீருடன் கலக்கின்றமையால் சுற்றிலுமுள்ள மக்கள் நோய்வாய்ப்படுகின்றனர் என்பதையும்;

(iii) கழிவுப் பொருட்கள் இவ்விடத்தில் இடப்படுவதை நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ள போதிலும் இற்றை வரை தீர்வொன்று கிடைக்கவில்லையென பிரதேசத்தில் வாழும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனரென்பதையும்;

(iv) குப்பை கூளங்கள் ஏற்றிச் செல்லப்படுவதால் சுற்றுபுறத்திலுள்ள பல வீதிகள் தற்போது சேதமடைந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கழிவுப் பொருட்களை ஏற்றிச் செல்வதால் சேதமடைந்துள்ள வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அகற்றப்படும் கழிவுப் பொருட்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் இடப்படுவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3222/12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006, 2007, 2008, 2009, 2010, 2011, மற்றும் 2012 ஆகிய ஆண்டுகளில் அரச சேவையில் உருவாக்கப்பட்ட தொழில்களின் எண்ணிக்கையை மாவட்ட அடிப்படையில் தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட தொழில்கள் உருவாக்கப்பட்ட துறைகள் யாவையென்பதையும்;

(iii) விண்ணப்பங்கள் கோரப்பட்டு, நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டதன் மூலமா மேற்குறிப்பிட்ட தொழில்கள் உருவாக்கப்பட்டன என்பதையும்;

(iv) ஆட்களை தெரிவுசெய்தல் திறமையின் அடிப்படையிலா நடைபெற்றது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?